**செய்தி வெளியீடு எண் : 622** **நாள்: 17.04.2022**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி

தமிழ்நாட்டின் தலைசிறந்த தொழிலதிபர்களுள் ஒருவரும் கெம்பிளாஸ்ட் சன்மார் குழுமத்தின் தகைமைத் தலைவருமான திரு. என்.சங்கர் அவர்கள் மறைந்தார் என்று அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

அசோசேம், சென்னை தொழில் - வர்த்தக சபை உள்ளிட்ட பல்வேறு உயர் அமைப்புகளின் தலைவராக இருந்த சங்கர் அவர்கள் விளையாட்டுத் துறையிலும் பெரும் ஆர்வம் கொண்டிருந்தவர் ஆவார். தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம், தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் ஆகிய அமைப்புகளின் தலைவராகவும் சங்கர் அவர்கள் திறம்படப் பணியாற்றியுள்ளார்.

தனது துறையில் ஆற்றிய பங்களிப்புகளுக்காகவும் சாதனைகளுக்காகவும் வாழ்நாள் சாதனையாளர் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை சங்கர் அவர்கள் பெற்றுள்ளார்.

கல்வி நிறுவனங்களிலும், அறக்கட்டளைகளிலும் பணியாற்றி அத்துறைகளிலும் சங்கர் அவர்கள் சேவை புரிந்துள்ளார். தென்னிந்தியாவுக்கான டென்மார்க் நாட்டின் துணைத்தூதராகவும் அவர் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. சங்கர் அவர்களின் மறைவால் துயரில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினர், நிறுவனத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in